Registered as a News Paper in Sri Lanka.

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

දිනක්කතිර

ஒளி - 01 - கதிர் - 172 · 02-10-2000 · திங்கட்கிழமை · பக்கங்கள் - 08 · விலை - ரூபா 5/-



மறுக்கப்படும் உரிமைகளை பொறுப்புடன் எடுத்துரைக்க....

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரஜைகள் முன்னணி வேட்பாளர்

பூ.வி.எம்.ஐ.றஹ்மத்துல்லாஹ்



X

எனது இலக்கம் 7

குடும்பத்திற்கு ஒருவர் எனக்கு வாக்களியுங்கள்!
அசாத்தியம் என்பதை சாத்தியமாக்குவோம் !

# வவுணதீவில் படையினர் மீது புலிகள் தாக்குதல்!

## இரு இராணுவ வீரர் பலி, நான்கு பேர் காயம்

(அரியம்)

மட்டக்களப்பு நகருக்கு மேற்கே 5கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள வவுணதீவு இராணுவ முகாமிற்கு வீதிச்சோதனையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப்புலிகள் நேற்று காலை 10 .30 மணியளவில் தாக்குதல் நடத்தினர். மோட்டார் மற்றும் சிறு ஆயுதங்கள் கொண்டு நடத்தப்பட்ட இத்தாக்குதலில் கொல்லப்பட்ட சிப்பாய் ஒருவரின் சடலம் மட்டக்களப்பு பொது வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. காயமடைந்த ஐந்து சிப்பாய்களும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறனர். இவர்களில் ஒருவர் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளனர்.ஏனைவர்கள் மேலதிக சிகிச்சைக்காக ஹெலிகப்டர்மூலம் கொழும்புக்கு கொண்டு சென்றனர்.

மேலும் சில படையினர் உயிரிழந்ததாக படையினருடன் இணைந்து செயற்படும் தமிழ்க்குழு வட்டாரங்கள் கூறுகின்ற போதிலும் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. சுமார் 3 மணி நேரமாக துப்பாக்கி வேட்டுச்சத்தங்களும் எறிகணை மற்றும் மோட்டார் சத்தங்களும் கேட்டவண்ணமிருந்தன. விடுதலைப்புலிகளும் படையினரும் பரஸ்பரம் எறிகணைத்தாக்குதல்களை நடத்தினர்.

விடுதலைப்புலிகள் ஏவிய எறிகணைகள் வவுணதீவு இராணுவ முகாமுக்கு அருகிலும், மட்டக்களப்பு விமானப்படைத்தளத்திற்குள்ளும் விழுந்து வெடித்தன.

மட்டக்களப்பு 23-3வது படைப்பிரிவு தலைமையகத்திலிருந்தும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களை நோக்கி

8ம் பக்கம் பார்க்க

## அக்கரப்பத்தனையில கட்சிமோதல்

(நமது நிருபர்)

தலவாக்கல்லை அக்கரப்பத்தனை நகரில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மாற்றுக் கட்சியினருக்கும் கைகலப்பு இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் மூன்று கட்சி ஆதரவாளர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தை தொடர்ந்து பொலிசார் மோதலைத் தவிர்க்க கண்ணீர் புகை பிரயோகம் மேற்கொண்டனர்.

## ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் தடுத்து வைப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா, மன்னார் வீதியில் நேற்றுக்காலை படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது வன்னி மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளரான ம.தவச்செல்வம் படையினரால் 45 நிமிடம் தடுத்து வைக்கப்பட்டதாக் தகவல்கள் தெரிவிக்கின்றது.

வீதிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்ட படையினர் ஐக்கிய தேசிக்கட்சியின் வேட்பாளரான ம.தவச்செல்வம் என பவரை தடுத்து வைத்தவேளை தான் ஒரு ஆபட்சேகா எனத்தெரிவித்தும் படையினர் விடுவிக்கவில்லை.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து மேற்படி கட்சி வட்டாரம் படை அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்ததைதொடர்ந்து 45 நிமிடங்களின் பின்னர் விடுதலை செய்தனர்.

## வன்னியல் மருந்து தட்டுப்பாடு

### சித்தவைத்திய துறையை விரிவுபடுத்த நடவடிக்கை

(வவுனியா நிருபவர்)

வன்னியில் உள்ள மல்லாவி வைத்தியசாலையில் தொண்ணூறு வீதமான மருந்துகள் முடிவடைந்துள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சலரோகம், வாதம், குருதிய முக்கம் போன்ற நோய்களுக்கான மருந்துகள் ஏற்பு தடுப்பு மருந்துகள் நுண்ணுயிர் கொல்லி ஊசி மருந்து என்பனவே முடிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை வன்னியில் சித்த வைத்தியத்துறையை விரிவுபடுத்த தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதற்காக சகல சித்த வைத்தியர்களும் எதிர்வரும். 6ம் திகதி ஒன்று கூடுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளன்ர்.

## ஓயாத அலைகள் நான்கு தொடர்வதாக புலிகள் அறிவிப்பு !

(தென்மராட்சி நிருபர்)

விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஓயாத அலைகள் நான்கு நடவடிக்கை தொடர்வதாக விடுதலைப்புலிகள் தெரிவிக்கின்றனர்.

நேற்று பிற்பகல் தென்மராட்சி கிழக்குப்புற படைநிலைகள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.


இதேவேளை சாவகச்சேரி நகரைக் கைப்பற்ற விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கை படையினரால் முறியடிக்கப்பட்டதாக படையினர் தெரிவிக்கின்றனர்.

சமீபத்தில் இடம் பெற்ற மோதல்களில் ஐம்பது இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர். 41 பேர் காயமடைந்துள்ளனர் என பாதுகாப்புத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

## ஐக்கிய நாடுகள் செயலாளருக்கு அவசர மகஜர்

(யாழ் நிருபர்)

யாழ் குடாநாட்டில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் 'இடையில் மீண்டும் யுத்தம் ஏற்பட்டுள்ளதால் பொதுமக்களுக்கும் சொத்துக்களுக்கும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக சமாதானத்திற்கும், நல்லெண்ணத்துக்குமான அமைப்பு ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் நாயகம் கொபி அனானுக்கு அவசர மகஜர் ஒன்றினை அனுப்பியுள்ளனர்.



சுயேச்சை குழு-1 இல்


மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்றத் தேர்தலில்

இரா. துரைரெட்ணம் (ரெட்ணம்) தலைமையில்

மீன் சின்னத்தில் போட்டி

3

சுயேச்சைக் குழு (1)



X

புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய கல்வி வசதிகளை எமது மாணவர்களும் பெற மீன் சின்னத்துக்கே வாக்களிப்போம்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF)

தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055, 24821
பெ(F)க்ஸ் : 065 - 23055
E-mail :- tkathir@snet.lk

## இதற்கு தீர்வு அதி தூரத்திலில்லை!

'சட்டி சுட்டதடா' 'கை விட்டதடா' என்பது ஒரு சித்தர் பாடல்

நாற்பத்தி நான்கு வருடங்களுக்கு முன் மக்களின் உணர்ச்சியை தூண்டி விட்டு மொழி வெறியை கிளப்பி இனக்குரோத்தை வளர்த்து ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்கு சிங்களம் மட்டுமே நாட்டின் ஒரே அரச கரும மொழி என்ற ஏணி பயண்படுத்தப்பட்டது.

சிங்களத்தை இருபத்தி நான்கு மணிநேரத்தில் அரியாசனத்தில் ஏற்றுவதாக கூறிய சந்திரிக்காவின் அப்பா எஸ்.டபிள்யு.ஆர் பண்டாரநாயக்காவும் 'அப்பே ஆண்டுவ' வந்துவிட்டதாக அன்று கொக்கரித்த இன வெறியர்களும் தங்கள் செயல்களால் நாடு பல வருடங்களுக்கு [illegible] தங்கி விடப்போகிறதென்பதை நினைத்துப்பார்க்க மறந்து விட்டனர்

சிங்களம்மட்டும் சட்டம் மொழி வெறியையும் இன வெறியையும் பக்கத்துணையாகக் கொண்டு பிறந்தது மட்டுமல்ல இனங்களுக்கிடையே வேற்றுமையையும் பிளவையும் பிரிவினையையும் விதைத்துக்கொண்டு வளர்ந்தது.

சிங்களம்மட்டும் சட்டம் 1956 ஆம் ஆண்டில் கொண்டு வரப்படுவதற்கு முன் [illegible]க்கிலும் கிழக்கிலும் தமிழ் பிள்ளைகள் கல்வி நிலையங்களில் சிங்களத்தை ஒரு விருப்பப்பாடமாக விரும்பிப்படித்தனர்.

வடக்கிலும் மட்டுமல்லாமல் நாடு முழுவதிலுமுள்ள கல்விநிலையங்களில் சிங்களம்.தமிழ். முஸ்லிம் பிள்ளைகள் ஒரே வகுப்பில் எந்த வேறுபாடுமில்லாது சகோதரர்கள் போல் ஒன்றாக படித்தனர்.

வகுப்பறையில் படிப்பது மட்டுமின்றி சகோதர ஒற்றுமையையும் போதனா மொழி வளர்த்து வந்தது.

இலங்கையில் ஆங்கிலம் போதனாமொழியாக இருந்த போது சிங்கள.தமிழ்.முஸ்லிம்மாணவர்கள் ஒரே வகுப்பில் ஒன்றாகவே இருந்து கல்வி கற்றனர்.

விளையாட்டுமைதானத்திலும் கூட மாணவர்கள்.மொழி.இன மத பேதமற்ற ஒன்றாக கூடிவிளையாடினர்.

1956 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் வந்த பின் ஒரே கல்லூரியில் படிக்கும் சிங்கள மொழிமூல மாணவர்கள் காலையிலும் தமிழ் மொழி மூலம் கற்கும் மாணவர்கள் பிற்பகலிலும் கல்வி கற்கத் தொடங்கினார்கள். ஒற்றுமை குலைந்தது துவேஷமும் வேற்றுமையும் வளர்ந்தது.

நாற்பத்தி நான்குவருடங்கள் கழித்து இப்பொழுது மீண்டும் சகல கல்வி நிலையங்களிலும் சகல பாடங்களிலும் ஆங்கிலமே போதனா மொழியாக இருக்குமென்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகா அறிவித்திருக்கிறார்.

தனியார் கல்வி நிலையங்களில் ஆங்கிலமே போதனாமொழியாகக் கல்வி கற்பிக்கப்படுகிறதென்றும் இன்று ஆங்கிலக் கல்வி அவசியமென்றும் கூறியிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா அடுத்த வருடத்திலிருந்து சில வகுப்புக்களில் ஆங்கிலமே போதனாமொழியாக இருக்குமென்றும் கூறியிருக்கிறார். பின்னர் எல்லா வகுப்புக்களிலும் படிப்படியாக ஆங்கிலமே போதனாமொழியாக இருக்குமென்றும் அறிவித்திருக்கிறார்.

நாற்பத்தி நான்கு ஆண்டுகளாக நாட்டின் ஒற்றுமையையும். ஒருமைப்பாட்டையும் சீரழித்த மொழி வெறியை இனியும் போதனாமொழியை மாற்றுவதன் மூலம் சீர் செய்ய முடியுமென்று எவருமே சிந்திக்க முன்வரமாட்டார்கள்.

தாய்மொழிக்கல்வியே ஒரு பிள்ளையின் அறிவு வளர்ச்சிக்கும் கல்வி வளர்ச்சிக்கும் முக்கியமானதாகும்.

ஜப்பானியரும் சீனர்களும் மற்றும் அறிவு வளர்ச்சியில் உலகிலேயே முன்னிலையில் நிற்கும் நாடுகளும் இனங்களும் ஆங்கிலத்தை போதனாமொழியாகக் கொண்டிருக்கவில்லை. தாய்மொழிமூலமே சகல கல்வியையும் கற்று முன்னேற்றம் பெற்றுள்ளனர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் போதனாமொழி என்பது வேற்றுமையை வளர்க்கவும் துவேஷத்தை ஊட்டவுமே கடந்த நாற்பத்தி நான்கு வருடங்களாகப் பயன்பட்டிருக்கின்றன. இனியும் ஆங்கிலத்தை, ஒரு இணைப்பு மொழியாகக் கொண்டு வந்தாலும் எதிர்பார்க்கும் தேசிய ஒற்றுமையோ ஒருமைப்பாடோ ஏற்பட முடியாது. அந்த அளவுக்குத் தமிழ் மக்கள் மீதான துவேஷம் நாட்டில் விளக்கப்பட்டுவிட்டது.

இனி சிங்களவர் சிங்களமொழியிலும் தமிழ் பிள்ளைகள் தமிழ் மொழியிலும் கல்வி கற்றே முன்னேற வேண்டும்.

ஆங்கிலத்தைப் போதனா மொழியாக்கப் போவதாக சந்திரிகா தெரிவித்திருக்கிறார். இவை சிங்களப் பேரினவாதிகளும் பௌத்த மகாசங்கமும் ஏற்றுக் கொள்வார்களா என்பது விரைவில் தெரிந்து விடும்.

சிங்களம் மட்டும் சட்டம் தோல்வியடைந்துவிட்டது. மோட்டார் வாகனங்களில் சிங்கள ஸ்ரீ எழுத்தும் இல்லாமலேயே போய் விட்டது.

பட்டபின்தான் அறிவு வருகிறது. இனப்பிரச்சினைக்கும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொள்ளும் காலமும் அதிக தூரத்திலிருக்காதென்றே சொல்லலாம்.

# உலக சரித்திரத்தின் உன்னத இடம் பெற்ற அண்ணல்

## இன்று காந்தியின் பிறந்தநாள்

உலகில் எத்தனையோ மக்கள் பிறக்கின்றனர். பிறந்து வாழ்ந்த அனைவரையும்உலகம் நினைத்துப் பார்ப்பதில்லை. சிலரைச் சில காலம் எண்ணுவர். ஆனால் எல்லோராலும் எக்காலத்திலும் போற்றப்பெறுகின்றவர்கள் மிக மிகச் சிலரே. அவ்வாறு காலத்தை வென்றுவாழும் அறத் தலைவர்களுக்குள்ளே அண்ணல் காந்தி அடிகள் தலை சிறந்தவராவர். இன்று (02.10.2000) அவரது பிறந்த தினமாகும்.

காந்தி அடிகள் 1869 அக்டோபர் 2ஆந் திகதி தோன்றி இம் மண்ணுலகில் பருவுடலோடு 79ஆண்டுகள் வாழ்ந்தார். அவர்வாழ்ந்த காலத்தில் புரட்சி செய்து இந்தியநாட்டு மக் களை விழிப்புறச் செய்தார். அவர் அறத்தின் அடிப்படையில் ஆற்றிய அருட்புரட்சியைக் கண்டு உலகமே வியந்தது.அவர் அறிவுறுத்தியதோடு அல்லது அவரே வாழ் நாளில் வாழ்ந்தும் காட்டிய அருள் நெறி இவ்வுலகத்தை என்றும் ஒன்றுபடுத்தி உய்விக்கவல்லது.

காந்தியடிகள் தனது 22 வது வயதில் ஆங்கில நாட்டின் தலைநகரில் கல்வி கற்று ஒரு வழக்கறிஞராகத் தொழில் புரிந்து வந்தார். அத்தொழில் மூலம் நேர்மை.அறத்தையும் மேற்கொண்டு ஒழுகினார். அகிம்சை ஓர் இணையற்ற சக்தி வாய்ந்த ஆயுதம்.அகிம்சை கோழைத்தனமன்று வீரத்தின் சிகரம் என்பதை உணர்ந்து அதைக் கையாண்டு கத்தியின்றி, இரத்தமின்றி, யுத்தமொன்று நடத்தி அடிமைக் கயிற்றை அறுத் தெறிந்தார் காந்தியடிகள்.

காந்தியடிகள் தமிழகத்தில் பெருந்தலைவர்களை உருவாக்கியவர். உத்தமர் காந்தியடிகள் தமிழ்த் தென்றலாகவும்



தொழிலாளர் தோழனாகவும் விளங்கினார். ஈ.வே.ரா.அரசியல் ஞானியான ராஜாஜி ஆகியோரும் அவரிடம் ஈடுபாடுகொண்டு உருவானவர்களே. அடிகள் எங்ஙனம் தமிழகத்தினிடம் ஈடுபாடு கொண்டிருந்தாரோ அங்ஙனமே தமிழகமும் அவரிடம் ஈடுபாடு கொண்டிருந்தது. தமிழகத்துக்கு புத்துயிர் ஊட்டியவர் அடிகளே. புதியதமிழகத்திற்கு அடிப்படையை அளித்தவர் அவரே. வள்ளுவர் அற வாழ்க்கைக்கு இலக்கியம் அவரே. எதிர்காலத் தமிழகத்தின் இலட்சியமும் அவரே. அடிகளார் பிறப்பால் குஜராத்தி: ஆனால் இதயத்தால் தமிழராக வாழ்ந்தார்.

காந்தியடிகள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சுதந்திரப்போருக்கு 1942ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அழைப்பு விட்டார். அதில் வெற்றி பெற்றார் 1947ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ந் திகதி இந்தியக்கொடி ஏற்றிவிக்கப்பட்டது. வெள்ளையன் கொடி வீழ்ந்தது. காந்தியடிகள் எடுத்துக் கொண்ட இடைவிடாத அறப்போர். கத்தியின்றி இரத்தமின்றி அவர் நடத்திய யுத்தம் 1947ஆகஸ்ட் 15இல் வெற்றி பெற்றது. இந்தியா அந்நிய ஆதிக்கத்தில் இருந்து மீண்டது.

"சத்தியம் வெல்லும்" என்ற தவச்சாலையில் தவ முனிவர்கள் சொல்லி விட்டுப் போன உபதேசத்தை கையாண்ட காந்தி வெற்றி பெற்றார். உலக சரித்திரத்தில் உன்னத இடம் பெற்றார்.

இறுதியாக காந்தியடிகள் 1948 ஜனவரி 30ஆந் திகதி வழிபாட்டுக் கூட்டத்திற்குப் போகும் பொழுது ஒரு மதவெறியினால் சுட்டுக் கொல்லப்பட்டார். இன்று அவர் மறைந்து 52ஆண்டுகளாகின்றன. அவர் மறைந்தாலும் அவர் நாமம் மறையவில்லை.

கல்லடி மூர்த்தி

# கிழக்கு மாகாணத்தில் அதிகரிக்கும் பெண்கள் மீதான வன்முறைகள்

இன்றைய நமது நாட்டில் யுத்த சூழல் காரணமாக பல இன்னோரன்ன சமூக நோய்கள் எம்மை மட்டும் அல்லாமல் எம் சமுதாயத்தினையும் சூறையாடுகின்றது. இவற்றின் ஒரு விளைவே பெண்கள் மீதான வன்முறை சம்பவங்கள் பெண்கள் மீது திணிக்கப்பட்டிருந்த வன்முறைகள் போர் காலம் நிறைந்த நாட்டிலும் சர்வாதிகார அரசு தவழ்கின்ற நாட்டிலுமே தலைவிரித்தாடும் என கூறப்படுகிறது.

மற்றும் இப்பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிரான கோஷம் என்ன தேவை என பாக்குமிடத்து பெண்கள் மீதான வன்முறைகள் கூடுதலாக எல்லா நாட்டிலும் நடாத்தப்பட்டு வரும் ஒன்று . இதில் குறிப்பாக பாலியல் பலாத்காரம். போன்ற செயல்களினை குறிப்பிடலாம். இவ்வாறான கீழ்த்தரமான சம்பவங்களில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்ற எண்ண கருவூலமாய் உலகளாவிய மட்டத்திலான பெண் அமைப்புக்கள் எல்லாம் சேர்ந்து 1992ம் ஆண்டு சர்வதேச ரீதியில் அஸ்தமனமான அமைப்பே இப் பெண்ணின பலாத்காரத்தினை தடுக்கவும் முற்பட்டது. இதில் பெண்கள் மீதான வன்முறைக்கு எதிராக போராட்டத்தினை மேற்கொள்ள என நவம்பர் மாத பிற்பகுதியினையும் மனித உரிமை தினமான டிசம்பர் 10ம் திகதியை முடிவு தினமாகவும் கொண்டு செயற்படலாயிற்று.

இவ்வாறு செயற்பட ஆரம்பித்த அமைப்பானது. பெண்களுக்கு எதிரான வன்முறை என்ன என்பதனை ஒருவரின் விருப்பத்திற்கு மாறான அளவில் அவரில் திணிக்கப்படுகின்ற விடயங்கள் அனைத்தும் வன்முறையுள் அடங்கும் இவ் வன்முறையானது உடல் ரீதியாகவோ அல்லது உள ரீதியாகவோ அல்லது சுதந்திரத்தினை மறுதலிக்கின்றதாகவோ அல்லது அவரது மாண்பினை இழிவுபடுத்தக் கூடியதாபகவோ இருக்கலாம். இவ்வாறான செயற்பாடுகள் பெண்களை மிக பாதிக்கும் நடவடிக்கைகளாகும்.



இப்பெண்கள் மீதான பலாத்கார சம்பவங்களில் நமது கிழக்கு மாகாணத்தினை உற்று நோக்குமிடத்து 1999 ஜனவரி - ஜூலை வரையில் பெண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் மட்டும் 178 ஆகவுள்ளது.

இதில் கணவனால் கொலை செய்யப்பட்டவர் இரண்டுபேர் (மட்டக்களப்பு). கடத்திச் செல்லப்பட்டு கொலையுண்டவர் ஒருவர்(ஏறாவூர்). சிறுயுவதி கொலை இரண்டு (காரைதீவு-1).காத்தான்குடி-1). துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானோர் இரண்டுபேர் (தன்னாமுனை-1) முறக்கொட்டான் சேனை(1) தற்கொலைகள் மூன்று (திருகோணமலை-1, வந்தாறுமூலை-1), ஆரையம்பதி-1). குண்டுவெடிப்பில் பலியானவர் ஒருவர் (மட்டக்களப்பு-1)

பாலியல் பலாத்காரம் நான்கு பேர் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளது.(வயது வந்தோர்) (வாழைச்சேனை-3) மட்டக்களப்பு -1) சிறுவர் பலாத்காரம் ஒன்று (ஏறாவூர்-1). பலாத்காரத்தின் பின் கொலை செய்யப்பட்டவர் ஒருவர்.

மட்டக்களப்பில் -1) பலாத்கார முயற்சி வாழைச் சேனையில் ஒன்று. மொத்தம் (18) பெண்கள் வரை நமது கிழக்குப் பிராந்தியத்தில் மட்டும் வன்முறைகளுக்கு உட்பட்டு உள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன. எனவே. இப்பெண்கள் மீது திணிக்கபட்டுள்ள இந்நிலை மாற அரசு சட்டங்கள் அமுல்படுத்த வேண்டும். இராணுவ வன்முறைகளிலிருந்து பெண்களுக்கு விசேட பாதுகாப்பளித்தல் வேண்டும். பெண்கள் மீதான வன்முறை ஒரு வெட்கக்கேடான செயல் என்ற விழிப்புணர்வினை எல்லா அமைப்பும் வெளிக்கொணர வேண்டும்.

இளைதம்பி வரதராஜன்

## வெண்ணெய் திரண்டு வரும் போது தாழி உடைந்தது

# நாகப்பா தப்பி வந்ததால் ராஜ்குமாரை மீட்கும் பணியில் பின்னடைவு: காட்டிலிருந்து திரும்பிய கோபால் பேட்டி

வெண்ணெய் திரண்டு வரும் போது தாழி உடைந்தது போல நாகப்பா தப்பி ஓடிவந்தது ராஜ்குமாரை மீட்கும் பணியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்று காட்டில் இருந்து திடீர் என்று சென்னை திரும்பிய நக்கீரன் கோபால் கூறினார்.

இதன் விவரம் வருமாறு:

வீரப்பனால் கடத்தப்பட்ட கன்னட நடிகர் ராஜ்குமாரும் அவரது உறவினர்கள் 3 பேரும் காட்டில் சுமார் 60 நாளாக உள்ள நிலையில் கடந்த 28-ம் தேதி ராஜ்குமாரின் உதவியாளராக இருக்கும் உதவி டைரக்டர் நாகப்பா காட்டில் இருந்து த்ப்பி தொட்ட காஜனூர் வந்தடைந்தார்.

இந்தச்சம்பவம் பெரும் பரப்பரப்பை ஏற்படுத்திய நிலையில் காட்டிற்குள் வீரப்பனுடன் நான்காவது தடவையாக பேச்சு வார்த்தை நடத்தச் சென்றிருந்த அரசதூதர் நக்கீரன் கோபால் நேற்று திடீர் என்று சென்னை திரும்பினார்.

முதல்வர் கருணாநிதியை சந்திக்க சென்னை வந்ததும் ஒரு காரில் அவரும் நக்கீரன் இணை ஆசிரியர் காமராஜும் கோட்டைக்கு வந்தனர்.

நேற்று முன்தினம் காலை 11.10 முதல் 12.20 வரை முதல்வர் கருணாநிதியை இருவரும் சந்தித்துப் பேசினார்கள். அவர்கள் காட்டில் நடந்தவைகளை முதல்வரிடம் எடுத்துக் கூறினார்கள். பின்னர் 12.30 மணிக்கு சென்னை கோட்டையில் உள்ள செய்தியாளர்கள் அறைக்கு வந்த நக்கீரன் கோபால் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது நக்கீரன் இணை ஆசிரியர் காமராஜ் உடன் இருந்தார்.

கோபாலிடம் நிருபர்கள் கேட்ட கேள்விகளும், அவர் அளித்த பதிலும் வருமாறு:

கேள்வி: நீங்கள் எப்போது சென்னை வந்தீர்கள் ?

பதில்: கடந்த செவ்வாய்க்கிழமை நான் காட்டிற்குள் சென்றேன். அன்று இரவும் புதன் கிழமையும் வீரப்பனிடம் பேச்சு வார்த்தை நட்த்தினேன்.

தமிழகத்தில் 5 தடா கைதிகளும் கர்நாடகத்தில் 121 கைதிகளும் விடுதலை செய்யப்படும் விஷயத்தில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள். சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசு நமக்கு சாதகமாக அபிடாலிட் மனு தாக்கல் செய்துள்ளது என்பதை எடுத்துக் கூறினேன். இந்த பிரச்சினையில் மத்திய அரசு தலையிடாது. அவர்கள் மாநில அரசு கருததுகககு சாதகமாக தான இருக்கிறார்கள் என்று விளக்கம் அளித்து வீரப்பனைச் சமாதானப் படுத்தினேன்.

வீரப்பனும் பிரச்சினைகளை தெளிவாகப் புரிந்து கொண்டு ராஜ்குமாரை விடுதலை செய்யும் முடிவோடு இருந்தார். சதாசிவம் கமிஷனுக்கு கர்நாடக நீதிமன்றம் தடை விதித்திருக்கிறது என்று ஆத்திரத்தோடு வீரப்பன் கேட்டார்.

அப்போது கர்நாடக அரசு அந்தத் தடையை நீக்க தீவிர முயற்சி எடுத்திருக்கிறது என்று விளக்கிக் கூறினேன். மேலும் சுப்ரீம் கோர்ட்டில் தடா கைதிகள் வழக்கு வரும் அக் 11-ம் தேதி விசாரணைக்கு வருகிறது. அதுவே இறுதி விசாரணையாக இருக்கும் என்று வீரப்பனிடம் எடுத்துச் சொன்னேன். இந்த விஷயத்தில் வீரப்பனை சமாதானப்படுத்தி அன்று இரவு ஒரு சுமுக முடிவு ஏற்பட்டது.



தலைமைச் செயலகத்தில் சந்தித்துவிட்டு வந்த கோபாலை வழிமறித்து நிருபர்கள் அவரிடம் பேசும் போது எடுத்த படம்.

### நாகப்பா தப்பினார்

புதன் இரவு தூங்கிக் கொண்டிருந்த போது அதிகாலை 3.30 மணிக்கு நாகப்பா, தான் சிறுநீர் கழித்து விட்டு வருவதாகக் கூறிவிட்டுப் போனார். வரவே இல்லை. அவர் போய் அரை மணி நேரம் கழித்துத்தான் இந்த விஷயம் எங்களுக்கு தெரியும். இது வீரப்பனை ஆத்திரப்படுத்தியது உடனே இடத்தை மாற்றுங்கள் என்று கத்திவிட்டான். பலமைல் தூரம் அழைத்து செல்ல முடிவு எடுத்தான்.

இந்தச் சூழ்நிலையில் நானும் அவர்களோடு சேர்ந்து - பொதி சுமக்க இயலாது என்று முடிவு எடுத்து அரசு தூதராகச் சென்ற நான் நடந்த விஷயத்தை அரசிடம் தெரிவிக்க வேண்டும் என்று முடிவு எடுத்து வீரப்பனிடம் சொல்லி விட்டு வந்து சேர்ந்தேன்.




கேள்வி: நாகப்பா தப்பி வந்தது ராஜ்குமாரை மீட்கும் முயற்சிக்கு பின்னடைவா ?

பதில்: நிச்சயமாகப் பின்னடைவு தான். அவர் தப்பித்து வராம லிருந்தால் ராஜ்குமார் மீட்கும் முயற்சிக்கு வெற்றி கிடைத் திருக்கும்.

### ராஜ்குமார் ஆரோக்கியம்

கேள்வி: ராஜ்குமார் எப்படி இருக்கிறார் ?

பதில்: நல்ல ஆரோக்கியமாக இருக்கிறார்.

கேள்வி: நீங்கள் மீண்டும் எப்போது காட்டுக்குப் போவீர்கள் ?

பதில்: இரு அரசுகளும் முடிவு செய்து போகச் சொன்னால் தான் போவேன்.

கேள்வி: நாகப்பா தப்பிச் சென்ற பிறகு அங்கு என்ன நடந்தது ?

பதில்: நாகப்பனைத் தேடி நான்குபேர் சென்றார்கள். அவர் உயிரோடு இருக்கிறாரா-இல்லையா என்பது தெரியவில்லை. காட்டுக்கு வெளியே என்ன நடந்தது என்பது உள்ளே இருந்த எங்களுக்கு தெரியவில்லை. மேலும் சுப்ரீம் கோர்ட்டில் வரும் 11-ம் தேதி இறுதி விசாரணை என்பதை வீரப்பனிடம் விளக்கியதால் அவன் முழுத்திருப்தியாக இருந்தான்.

கேள்வி: நீங்கள் புறப்பட்டு வரும் போது வீரப்பன் நிலை எப்படி இருந்தது ?

பதில்: கூடியமட்டில் வீரப்பனை சமாதனம் செய்து விட்டுத்தான் வந்திருக்கிறேன்.

கேள்வி: வீரப்பன் குழுவினர் அங்கு கூடிப் பேசுவார்களா ?

பதில்: தினமும் கூடிப் பேசுவார்கள். அரசியல் உட்பட அனைத்து விஷயங்கள் பற்றியும் பேசி அலசுகிறார்கள்.

கேள்வி: மீண்டும் எப்போது காட்டுக்குப் போகிறீர்கள் ?

பதில்: வீரப்பனிடமிருந்து அரசுக்கு தகவல் வந்ததும் போவேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

## சுரங்க வெடிவிபத்தில் பலியானோர் 48 ஆக உயர்வு

(பீஜிங்)

சீனாவின் நிலக்கரி சுரங்கத்தில் கடந்த புதனன்று இடம பெற்ற வெடி விபத்தில் பலியான வர்களின் எண்ணிக்கை 48 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை நிலக்கரி சுரங்க வெடி விபத்தில் காணாமல்போன 113 பேரை கண்டுப்பிடிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் நடவடிக்கைகள் நம்பிக்கையீனத்தை ஏற்ப டுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சுரங்கத்தில் 24பேர் பணிபுரிந்ததாகவும் இதுவரை 48 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் அத்துடன் காயமுற்று புதையுண்டுக்கிடந்த 83 பேர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டுள்ளனா் என்று சீன அதிகாரிகள் தெரிவித்தனா்.

## ஜோலோ தீவின் தடை நீக்கம்

(மணிலா)

ஜோலோதீவுக்குள் உல்லாசப் பயணிகள் எவரும் செல்லக்கூடாது என்று பிலிப்பைன்ஸ் அரசு விதித்திருந்த தடை தற்போது நீக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு எதிரான இரண்டு வாரக் கால இராணுவ நட்வடிக்கைகளை அடுத்தே இந்த அறிவிப்பை பிலிப்பைன்ஸ் விடுத்திருக்கிறது.

எவ்வாறு இருப்பினும் முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை தொடரும் என்றும் தெரிவிக கப்பட்டுள்ளது.

இதே வேளை அபூசாயா தீவிரவாதிகளுக்கும் படையினருக்குமிடையில் நடைபெற்ற வரும் மோதல்கள் காரணமாக ஜோலோ தீவை விட்டு 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர் என்று தகவல்கள் தெரிலிக்கின்றன.

## சுஹாட்டோவின் வழக்குத்தள்ளுபடி பக்கச்சார்பானது?

(ஜகார்த்தா)

இந்தோநேசியா முன்னாள் ஆட்சியாளர் சுஹடடோவுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டிலிருந்து நீதி மன்றம் அவரை விடுதலை செய்தது பக்கச் சார்பானது என்று இந் தோநேசிய ஜனாதிபதி அப்துல் வஹிட தெரிவித்துள்ளார்.

மேலும் பரவலாக விமர்சிக்கப்பட்டு வரும் இந்தோநேசியாவின் சட்ட முறமைகளின் நேர்மை குறித்தும் அவர் கேள்வி எழுப்பினார்.

79 வயதான சுஹாட்டோவின் சுகவீனத்தைக்க ருத்தில் கொண்டே தென்ஜகர்த்தா நீதி மன்றம் அவர் மீதான வழக்கை தள்ளுபடி செய்ய தீர்மானித்ததாக கூறப்படுகிறது.

இதேவேளை தமது வழக்கை தள்ளுபடி செய்யப் பட்டமைக்காக இறைவ னுக்கு தான் நன்றி சொல்ல வேண்டும் என்று சுஹாட்டோ தெரிவித்துன்னார்.

## ஜப்பான் 5 இலட்சம் தொன் அரிசி உதவி

(சியோல்)

வடகொரியாவுடன் தமது உறவு மேலும் பலப்படுத்தல் தொடர்பாக ஜப்பான் 5 இலட்சம் தொன் அரிசியை வழங்குவது குறித்து பரிசீலனை செய்து வருவதாக ஜப்பானிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரு நாடுகளுக்கிடையிலான புதிய சுற்றுப்பேச்சுவார்த்தைகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது இது தொடர்பான இறுதி தீர்மானம் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை ஜப்பான் குறைந்தப்பட்சம் 5 இலட்சம் தொன் அரிசியை வழுங்காது போனால் இரண்டாம்கட்டப் பேச்சு வார்த்தையை நடத்துவதற்குரிய அட்டவணையை தயாரிக்காது என்று வடகொரியா தெரிவித்துள்ளது.





சமாதானத்தின் பெயரால்
உரிமை சாகடிக்கப்படக்கூடாது.
உரிமையின் பெயரால்
சமாதானம் வாழவைக்கப்பட
வேண்டும்.

பசீர் சேகுதாவூத் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் தேசிய ஐக்கிய முன்னணி

# "ஒவ்வொருவரும் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் சிந்தித்து செயல்பட வேண்டிய நேரம்"

## ஆரையம்பதி இரட்டைக் கொலை விசாரணையில் நீதிபதி அறிவுரை

(நீதிமன்ற நிருபர் சே.பங்கயற்செல்வம்)

ஆரையம்பதி, சூட்டுச் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி ஜே.விஸ்வநாதன் அளித்த மீள் விசாரணையின் தீர்ப்பின் முழு விபரம் வருமாறு;

கடந்த 12ம் திதகி ஆரையம்பதியைச் சேர்ந்த பூபாலபிள்ளை சிறிகாந் (23) கனகசபை கருணாகரன் (22) ஆகிய இரு வாலிபர்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இது தொடர்பான மரண விசாரணைகளை கடந்த 14ம் திகதி மட்டக்களப்பு மாவட்ட பதில் நீதிபதி கே.தங்கவடிவேல் நடத்தினார். அப்போது, இம்மரணம் ஆட்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டதோடு அவசரக் காலச்சட்டத்தின் கீழ் பொலிஸாருக்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்களில் அவர்களுக்கு சுடுவதற்கு அதிகாரம் உண்டு என்றும் இது சம்மந்தமாக மேலதிக விசாரணை செய்ய அவசியம் இல்லை. எனவும் இம்மரண விசாரணையின் போது தீர்ப்பு அளித்திருந்தார்.

இம்மரணங்கள் தொடர்பான மேற்கூறிய தீர்ப்பு திருப்தி அளிக்காமையினால் இது சம்பந்தமான மீள் மரண விசாரணையை நடாத்திய மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி மீள் விசாரணையின் தீர்ப்பை நேற்று முன்தினம் அளித்திருந்தார். தீர்ப்பு அளித்ததன் மேலதிக விபரம் பின்வருமாறு:

### நெஞ்சில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள்

ஆரையம்பதி விசேட அதிரடிப்படையினரின் துப்பாக்கி பிரயோகத்தால் பூபாலபிள்ளை ஸ்ரீகாந்த், கனகசபை கருணாகரன் ஆகிய இரு இளைஞர்கள் மரணமடைந்துள்ளனர். பூபாலபிள்ளை சிறீகாந்தின் பிரேத பரிசோதனை அறிக்கையில் தலையின் பின் பகுதியில் துப்பாக்கிச் சூடு பட்டுள்ளதாகவும், அதன் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாகவும் குறிபபிடப்பட்டுள்ளது.

கருணாகரனின் பிரேத பரிசோதனை அறிக்கையில் நெஞ்சில் துப்பாக்கி சூட்டுக் காயங்கள் காணப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டதோடு அதன் காரணமாக மரணம் சம்பவித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மரணவிசாரணையை மேற்கொண்ட பதில் நீதவான் கே.தங்கவடிவேல் அளித்த தீர்ப்பில் விசேட அதிரடிப்படையினர் சந்தேகத்திற்கு இடமான ஒரு நபர் தப்பி ஓட எத்தனிக்கும் போது முழங்காலிற்கு கீழே துப்பாக்கி பிரயோகம் செய்து அவர் ஓடுவதைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியுமென்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால். இச்சம்பவம் இரவு நேரத்தில் இடம் பெற்றதால் இருட்டில் ஒரு நபர் குந்தியிருக்கின்றனரா, நிமிர்ந்து நிற்கின்றாரா? குனிந்து நிற்கின்றாரா என்பவற்றை அவதானிக்க முடியாத காரணத்தினால் முழங்காலிற்கு கீழே துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் சந்தர்ப்பம் பகல் நேரத்தில் இடம்பெறும் துப்பாக்கி பிரயோகங்களுக்கு ஏற்புடையதாகும். பதில் நீதவான் அவசரக்காலச் சட்ட விதிகள் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால், பொலிஸ் தரப்பில் மரண விசாரணை குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் பிரிவுகளுக்கமைய சாதாரண சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டுமென பொலிஸார் விண்ணபித்து இருப்பதனால் அவசரக் காலச்சட்ட விதிகள் ஏற்புடையதாகாது.

உதாரணமாக, அரசாங்க நிறுவனமொன்றில் அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு பொருள் களவாடப்பட்டால் பொலிஸார் 1982ஆம் ஆண்டின் 12ம் இலக்க பொதுச் சொத்துகளுக்கு எதிரான குற்ற பகர் சட்டத்தின் பிரிவு 03 இன் கீழ் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யலாம். அல்லது இலங்கை தண்டனைச் சட்டக்கோவை பிரிவு 367ன் கீழ் வழக்கு தாகக்ல் செய்யலாம். எனவே, இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகளின் கீழ் வழக்குத் தாக்கல் செய்வதா அலல்து பொது சொத்துகளுக்கு எதிஜரான தளிரான குற்றப் பகர் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்வதா என தீர்மானிக்கும் அதிகாரம் பொலிஸாருக்கு உண்டு. அதே போன்று குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டத்தின் கீழ் மரண விசாரணை மேற்கொள்ளுமாறு பொலிஸார் விண்ணப்பிக்கும் சந்தர்ப்பங்களில் அவசரக்காலச் சட்டவிதிகளைப் பின் பற்றுவது முறையற்றதாகும்.

### கோயில் திருவிழாக்கள் இரவில் அவசியம்தானா?

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம் பவம் இரவு நேரத்தில் நிகழ்ந் துள்ளது. படையினர் தரப்பு சாட்சியத்தின் படி இரவு நேரத்தில் பொது மக்கள் படைமுகாம் அமைந்துள்ள பகதிக்கண்மையில் நடமாடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், அவ்வாறு நடமாடுவதனால் அரிக்கன் லாம்பு வெளிச்சத்துடன் நடமாட வேண்டும் எனப் பொதுமக்களுக்கு அறிவுறுத்தி இருப்பதாக கூறப்பட்டுள்ளது. இது தொடர்பாக இறந்த சிறிகாந்த் என்பவரின் தந்தையான பூபாலபிள்ளை சாட்சியமளிக்கும் போது இரவு நேரத்தில் வெளியில் போவதென்றால் அரிக்கன் லாம்புடன் செல்வோம் என்று கூறியிருப்பதன் மூலம் உறுதிபடுத்தியுள்ளார். அதேவேளை இறந்த இளைஞர்களின் உறவினர்கள் தமது சாட்சியத்தில் கோயில் சடங்கை இரவு நேரத்தில் நடாத்துவதற்கு ஆலய நிர்வாகம் முன்கூட்டியே படையினரின் அனுமதியைப் பெற்றிருப்பதாக நாங்கள் அறிந்ததால் இவ்வாறான ஒரு சம்பவம் நிகழுமென்று அவர்கள் சற்றும் எதிர்பார்க்கவில்லை எனக் கூறியுள்ளனர்.

இத்தகையதொரு சூழ்நிலையில் படைமுகாம்களுக்கு அருகில் அமைந்துள்ள ஆலயங்களில் இரவு நேரத்தில் சடங்குகள், திருவிழாக்கள் நடத்தவது உசிதமானதா பாதுகாப்பானதா எனச் சிந்திக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது. பல பிரசித்திபெற்ற கோயில்கள் இந்த ஆலயத்தை உணர்ந்து இரவு நேரத் திருவிழாக்கள், சடங்குகள் நடத்துவதைத் தவிர்த்துள்ளன. இரவு திருவிழாக்களை நடத்தும் கோயில்கள் கோயிலுக்கு வரும் பொதுமக்களை ஆலய வளாகத்திலேயே இரவு முழுவதும் தங்கும்படியும், மறுநாள் பொழுது கழிந்த பின் வீடுகளுக்கு திரும்புமாறு கேட்டுக்கொள்வதை அறிய முடிகின்றது. ஒவ்வொருவரும் தமது சுய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிரல் தாமே சிந்தித்து செயலாற்ற வேண்டிய காலம் இது படையினருக்கும் போராளிகளுக்கும் எந்த நேரத்தில் எவ்விடத்தில் மோதல் ஆரமபிக்கலாம் என குறிப்பிட்டு கூற முடியாத சூழ்நிலையில் வாழும் பொது மக்கள், சிந்தித்து வரும் முன் காக்கும் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறு சிந்தித்து செயற்படத் தவறினால் இத்தகைய மரணங்கள் குறிப்பாக இரவு நேரங்களில் இடம்பெறுவது தொடர்கதையாகிவிடும். இத்தகைய துர்ப்பாக்கிய நிகழ்வுகளைத் தடுப்பதில் இரவு நேர திருவிழாக்களை ஒழுங்கு செய்யும் ஆலய நிர்வாகிகளுக்குப் பெரும் பொறுப்புண்டு. ஆலய ஒலி பெருக்கிகள் மூலம் ஆலய நிர்வாகம் பொதுமக்களை இரவு நேரத்தில் படை முகாம்களுக்கும். படையினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தும் பகுதிகளுக்கும் அண்மையில் நடமாட வேண்டாமென்று எச்சரிக்கை செய்ய வேண்டும்.

இம்மரண விசாரணை, குற்றவியல் வழக்குகளை கையாளுவதில் நீண்டகால அனுபவம் வாய்ந்த சட்டத்தரணியும் பதில் நீதவானுமாகிய ஒருவரால் நடாத்தப்பட்டுள்ளது. சம்பவம் நடைபெற்ற இடத்தையும் பதில் நீதவான் பாாவையிட்டுள்ளார். அவர் இம் மரணங்கள் இரண்டும் ஆட்கொலை எனக் குறிப்பிட்டிருப்பதில் தவறெதுவும் காணப்படவில்லை.

மன்று ஏற்கனவே கட்டளையிட்டது போன்று புலன் விசாரணை மேற்கொள்வது பொலிஸாரின் பொறுப்பாகும். புலன் விசாரணையில் பங்குபற்ற நீதித்துறைக்கு அதிகாரம் இல்லை.

மேற்கூறிய காரணங்களால் இவ்விருவரின் மரணங்களும் "ஆட்கொலை" என்பதை உறுதிபடுத்துகின்றேன் என நீதிபதி தெரிவித்தார்.

# கிழக்குப்பல்கலைக்கழக சமூகவியல் சமூகத்தின் உலக சிறுவர் தின விழா

உலக சிறுவர் தினத்தை கிழக்குப் பல்கலைக்கழக சமூகவியல் சமூகத்தினர் உபவேந்தரின் ஆலோசனையுடன் பல்வேறு தொடர் நிகழ்வுகளினூடாக (02-10-2000) திங்கள் முதல் நடத்தி, சிறுவர்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு ஆரம்ப கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளனர். அதில்:-

வந்தாறுமூலை விஷ்ணு வித்தியாலயத்தில் திங்கட்கிழமை காலை 9.00மணிக்கு கருத்தரங்கும் பரிசளிப்பும் இடம் பெறவுள்ளது. நண்பகல் மாவடிவேம்பு மகளிர் இல்லத்தில் கருத்தரங்கும் மதியபோசன வைபவமும் பரிசளிப்பும் இடம்பெறவுள்ளது. இவற்றில் கலைப்பீடாதிபதியும் துறைத் தலைவர்களும் சிறப்புரை ஆற்றவுள் ளார்கள். அத்துடன் சமூகவியல் மாணவர்களின் ஆய்வு மூலமாகவந்தாறுமூலை கிராமத்தில் அடையாளம் காணப்பட்ட சிறுவர்களுக்கு போஷாக்கு உணவு வழங்கும் திட்டமும் அவர்களுக்கான கல்வி வசதிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதைவிட மட்டக்களப்பு நகரில் அநாதரவாக வீதியில் திரியும் சிறார் களை பாதுகாப்பான இல்லங்களில் சேர்ப்பிப்பதற்கான நடவடிக்கைளும் செயறபடுத்தப் படவுள்ளன.

## மின்விநியோகத் திட்டம்

(தமிழன்பன்)

மகிலூர் கிராமத்தில் மின் விநியோகத்திற்காக தபால் தொலைத் தொடர்பு பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லாஹ் எழுபது ஆயிரம் ரூபாயை வழங்கியுள்ளார்.

பல காலங்களாக மின் விநியோகம் இல்லாமல் இருந்ததை மகிலூர் மக்கள் பிரதி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்ததால் ஏனைய பிரதேச மக்களைப்போல் இவர்களும் மின் விநியோகத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கருதியதால்மின் விநியோகத்திற்கான பணத்தை வழங்கினார்.

# தேர்தலில் ...............

டத்திலிருந்து தமிழர் படுகொலை செய்யப்பட்டு விரட்டி அடிக்கப்பட்டது போலவே தமிழர்களும் இப்பிரதேசங்களிலிருந்து துரத்தப்படுவார்கள் என்பது நிச்சயம்

இந்த அரசியல் வாதிகளுக்கு தமிழ் மக்கள் வாக்களிப்பது என்பது எவ்வளவு ஆபத்தானது என்பதை தமிழ் மக்கள் உணராததுதான் மிகப்பெரிய பரிதாபம்

1990இல் சத்துருக்கொண்டானில் வந்தாறுமூலையில், செங்கலடியில் புதுக்குடியிருப்பில் வாழைச்சேனையில் என 2000க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் ஊர்காவல் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர். படையை வழிநடத்தியவர்கள் யார் என்பதை மக்கள் ஒரு முறை மீள நினைத்துப்பார்க்க வேண்டும்.

வாழைச்சேனை பேத்தாளையில் 40க்கு மேற்பட்ட தமிழ் பெண்களை பாலியல் பலாத்காரத்திற்குள்ளாக்கி படுகொலை செய்துவிட்டு அவர்களின் உள் ஆடைகளை கம்பி வேலிகளில் தொங்கவிட்டு இது தான் அத்தனை தமிழ் பெண்களுக்கும் நடக்கும் என கூறிய ஊர்காவல் படையினரையும் அவர்களை வழிநடத்தியவர்களையும் மறக்கமுடியுமா?


இப்படி மட்டக்களப்பு தமிழ் கிராமம் ஒவ்வொன்றிலும் மௌனமாக கண்ணீர் விடும் தமிழ் மக்கள் அக்கொடுமைகளைப் புரிந்த ஊர்காவல் படையினரையும் அவர்களுக்கு ஆயுதங்கள் வழுங்கி பாதகத்திற்கு துணை போனவர்களையும் எப்படி மறப்பது?

எனவே இம்முறை தேர்தலில் வாக்களிக்க முன்னர் மக்கள் இரண்டு விடயங்களை ஆழமாக ஒரு முறை மீள நினைத்துப்பார்க்க வேண்டும் .

ஒன்று மட்டக்களப்பு தமிழ் மக்களுடைய இவ்வளவுகால வரலாற்றில் நடந்தேறியுள்ள கசப்பான சம்பவங்கள்.

மற்றையது மட்டக்களப்பில் வசிக்கும் மக்கள் பிரிவினர்களுக்கேற்ற விகிதாசாரப்படி தமிழ் மக்களது பிரதநிதித்துவங்களைக் காத்துக்கொள்வது.

## 3வது பிறந்ததின வாழ்த்து




கௌசிகா

வந்தாறுமூலையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கமலாதேவி தம்பதிகளின் செல்வப் புதல்வி கௌசிகா தனது 3வது பிறந்த தினத்தை 10-02-2000இல் தனது இல்லத்தில் வெகு விமர்சையாக தனது அன்புச் சகோதரர்களோடு கொண்டாடுகிறார்.

அவரை அண்ணாமார்களாகிய கௌசிகன், கவிதாஸ், பெரியப்பா ஜோன்சன், பெரியம்மா சிவக்கொழுந்து, மாமாமார்கள் மோகன், இல்லைநாதன் மாமா, மாமிமார் டெயிசி, லெவின், சின்னம்மா தமிழ்ச்செல்வி மற்றும் உறவினர்கள் சித்தாண்டி முருகன் அருள் பெற்று சீரும் சிறப்போடும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.


தகவல்:- சந்திரசேகர்
72/5 விஜயபுரம்,
மட்டக்களப்பு

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) மட்டக்களப்பு மாவட்டம்

* வடக்கு கிழக்கு இணைந்த தாயகத்தை வலியுறுத்த * அவசரகால சட்ட நீடிப்புக்கு எதிராக வாக்களிக்க
* "புலி" களுடன் பேசி பொது இணக்கத்துக்கு வருமாறு அரசை வலியுறுத்த

வெளிச்சவீட்டு சின்னத்திற்கு வாக்களியுங்கள் !



பிரசன்னா - 4

4 5

சாந்தன் - 5

# பிறந்த திகதி தரும் யோகம்.

## ஜோதிடம் ஏப்ரல் - 03

ஏப்ரல் 3-12-21-30ம் தேதிகளில் பிறந்தவர்களின் பலன்கள்:-

எண் **3** அதன் அதிபதி குரு (வியாழன்)

வாழ்க்கையில் உயர் நிலை பெறவேண்டும் என்ற தீராத ஆசை உடையவர்கள். நல்ல கொள்கை உடையவர்கள். சிறந்த நிர்வாகத்திறமை பெற்றவர்கள். தனது கொள்கைப்படியே அனைவரும் நடக்க வேண்டும் என்னும்எண்ணம் கொண்டவர்கள். சட்டத்துறையிலேபுகழ் பெற்ற வர்கள். பெரிய தொழில் நிறுவனங்களைநடத்திச் செல்லும் திறமைபெற்றவர்கள் சட்டப்படியே எதையும் நிறைவேற்றுபவர்கள். நீதிக்குப் புறம்பாக யாருக்கும் சலுகை தராதவர்கள் சிறந்த நண்பர்களையும் உடையவர்கள். அதே நேரத்தில் மறைமுக எதிரிகளும்இருப்பர். தன்னிச்சையாகவே செயல்படுபவர்கள். குடும்பத்தில் தலைவராக இருந்து நிர்வாகம் செய்பவர்கள். எந்தவிதமான ஆபத்திலிருந்தும் தப்பிக்கொள்ளும் திறமை சாலிகள்.சமுதாயத்தில் தலைவராகவும் இருப்பீர்கள். அந்த சமூகத்தை நல்வழியிலும் நடத்திச் செல்பவர்கள். அரசியலில் ஈடுபாடும் ஏற்படும். சமுதாயத்தில் கீழ்நிலையில் இருப்பவர்களுக்காக தன்னால் இயன்ற அளவு பாடுபடும் பெரும் தன்மை கொண்டவர்கள். அரசாங்கத்தில் சிலர் உயர்பதவி பெறுவார்கள். காவல் துறை இராணுவம் போன்ற துறைகளில் உயர் பதவியும் பெறும் யோகமுடையவர்கள். ஒரே நேரத்தில் இரு தொழில் செய்யும் வல்லமை பெற்றவர்கள். நியாயமானவர்.

விஞ்ஞானம் பொருளாதாரம், கலை, இலக்கியம் இவைகளில் ஈடுபாடு உடையவர்கள். நல்ல உடல்வாகு உடையவர்கள் விளையாட்டில் ஆர்வமுடையவர்கள். என்பதால் அதற்காகஉடல் வாகும் கொண்டவர்கள். அல்சர்- இருக்கும் அதனால் உணவுப் பழக்கத்தை சரியான நேரத்தில் உண்ணல் நன்று. வாயுப்பதார்த்தத்தை ஒதுக்க வேண்டும்.

தண்ணீர் அதிகம் அருந்துவதால் எளிதில் ஜீரணமாகும். இரவில் அரைவயிறு உணவு போதுமானது.வாழைப்பழத் தையும், பசும்பாலையும் உணவில் சேர்த்துக் கொள்வது நன்று.

மத்திம வயதில் உடல் பருமனாவதை குறைத்துக்கொள்ளுவதுஅவசியமாகும். யோகப்பியாசம், உடல்பயிற்சி செய்து வருவதால் உடல் பருமனை ஓரளவு குறைக்கலாம்.

3-6-9-12-15-18-21-24-27-30ம் தேதிகள் எந்தவருடம் எந்த மாதமானாலும் அதிர்ஷ்டம் தரும் தேதிகளே.

உங்களது வாழ்க்கையில் 3-6-9-12-15-18-21-24-27-30-33-36-39-42-45-48-51-54-57-60-63-66-69-72-75ம் வயதுகளில்முக்கியமான நிகழ்ச்சிகள் நடைபெறும்.

3-6-9-12-15-18-21-24-27-30ம் தேதிகளில் பிறந்தவர்களுடன் ஏற்படும் உறவுபலமாகஅமையும். வாழ்க்கைத்துணைவர்களும் இதே எண்ணில் பிறந்தவர்களானால் இவ்வுல வாழ்க்கைஎப்பொழுதும் மகிழ்ச்சியானதாக அமையும்.

நிறங்கள்:- ஓரேஞ். றோஸ், தாமரைப்பூவின்நிறம், கத்தரிப் பூநிறம், மஞ்சள், சிவப்பு நிறங்களில் ஆடைகள் அணிவதால் மனமகிழ்ச்சியையும், சந்தோஷத்தையும் தரும். இரத்தினம்:- புஸ்பராகம் தங்கம்போன்று பொன்னிறத்திலே ஒளிதரக் கூடியத். இதை அணிவதால் மலட்டுத்தனம் நீங்கும்,நுரையீரல் நோய் சோகை நோயும் குறைவடையும்.

வே. தவராசா

# கூட்டத்திற்கு போனால் குண்டெறிவோம்

(தமிழன்பன்)

களுவாஞ்சிக்குடி நகரில் 29-09-2000 அன்று தேசிய ஐக்கிய முன்னணியின் பட்டிருப்புத் தொகுதிக்கான அபிவிருத்தி கருத்தரங்கு இடம்பெற்றது.

இதற்கு தபால் தொலைத் தொடர்பு பிரதி அமைச்சரும், வேட்பாளருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா கலந்து கொண்டு பட்டிருப்புத் தொகுதி அபிவிருத்தி தொடர்பாக உரையாற்றினார்கள்.

இந்த கலந்துரையாடலுக்கு மகிளூர் கிராமங்களில் இருந்து ஆதரவாளர்கள் வருகை தர இருந்த நேரம் ஒரு தமிழ்க் கட்சியினர் சென்று இந்த கலந்துரையாட லுக்கு சென்றால் குண்டெறிவோம் என கூறியதோடு மக்களின் வேலிகளை உடைத்து அட்டகாசம் செய்தனர்.

இதனை அறிந்த பிரதி அமைச்சர் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் புகார் செய்ததோடு நேரில் சென்று மக்களை பார்வையிட்டு ஆறுதல் மொழி கூறிவிட்டுத் திரும்பினார்.

# தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் யார்? தேடியலைய வேண்டிய நிலையில் மக்கள்

### தே.ஐ முன்னணியின் ஆள்மாறாட்ட தில்லுமுல்லுகள்

**கடந்த 50 வருடத்திற்கும் மேற்பட்ட இலங்கையின் அரசியல் வரலாற்றில் எந்தவொரு சிங்களக் கட்சியோ அல்லது தமிழ்க் கட்சியோ செய்யாத ஆள்மாறாட்டம் இம்முறை தே.ஐ.மு.யினால் செய்யப்பட்டுள்ளது**

வேட்புமனுத்தாக்கல் செய்யப்பட்ட வேளையில் முன்னாள் அமைச்சர் இராசதுரை தான் தங்கள் தலைமை வேட்பாளர் என்று கூறிய தே.ஐ.மு.யினர் இப்போது அவர் அல்ல, இது வேறு ஒருவர் என கூறத்தொடங்கியிருக்கிறார்கள்.

மட்டக்களப்பில் இருக்கும் இந்த செல்லையா இராசதுரை யார் என்று தமிழ் மக்கள் யாருக்கும் தெரியாது. அதுவும் அவர் தலைமை வேட்பாளர்என்பதுதான் வேடிக்கையான விடயம். எல்லோரின்



வேடிக்கைப் பொருளாக தமிழ் மக்கள் மாற்றப்பட்டிருக்கிறார்களா? தலைகுனியாத, தன்மானமுள்ள மறத்தமிழன் என பெயர்பெற்ற மட்டக்களப்பு தமிழ் மக்களை இவர்கள் என்ன நினைத்துக் கொண்டார்கள் என குமுறும் உள்ளங்களும் இல்லாமல் இல்லை. மட்டக்களப்பு தமிழ் மக்கள் அனைவரும் தன்மானமுள்ள தமிழன் என்பதை இவர்களுக்கு புரியவைக்க வேண்டாமா?

தேர்தல் வேட்பு மனுவை தாக்கல் செய்தபோது முன்னாள் அமைச்சர்செல்லையா இராசதுரையேதமது தலைமை வேட்பாளர் என்று முஸ்லீம் காங்கிரஸ் அறிவித்தது. அவரிடமிருந்து கையொப்பம் பெறப்படாமல் போலிக்கையெழுத்துவைத்து வேட்பு மனுதாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. முன்னாள் அமைச்சர் செல்லையாஇராசதுரை மலேசியாவிலேயே வசித்து வருகிறார். அவர் வேட்பு மனுவில் இலங்கைக்கு வந்து செப்டம்பா 3ம் திகதி கையொப்பம். இடவில்லை கையொப்பத்தை உறுதிசெய்த முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் மூத்ததுணைத்தலைவர் மருதூர் கனி என அழைக்கப்படும் ஹனிபா கையொப்பத்தை உறுதிப் படுத்தியது. மோசடி வேலையாகும். எனவேதேசியஐக்கிய முன்னணியின் வேட்பு மனுவை நிராகரிக்க வேண்டும் என கோரி ரெலோவின மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் நித்தியானந்தன் இந்திரகுமார் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார்.

இதனையடுத்து மலேசியாவில் வசித்து வரும் செல்லையா இராசதுரை தான் வேட்புமனுவில் கையொப்பம் இடவில்லை என மனுதாரர்களுக்கு எழுத்துமூலம் அறிவித்திருக்கிறார். எனத் தெரியவருகிறது.

தேசியஜக்கிய முன்னணி என்ற பெயரில் போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் யாழ்ப்பாணத்திலும் இவ்வாறு உரியவர்களின் சம்மதம் பெறாமல் வேட்பாளர் பட்டியலில் போலி கையொப்பங்களைஇட்டு வேட்பு மனுக்களைகையளித்துள்ளதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. புனர்வாழ்வுபுனரமைப்பு துறைமுகங்கள் அமைச்சின மேலதிக செயலாளர்களான ஜெயரத்தினம், லங்காநேசன், எழுத்தாளர் செ.யோகநாதன், முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண கல்வி கலாசார அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா ஆகியோரின் பெயர்களை வேட்பு மனுவில்சேர்த்து இவர்களுக்கு பதிலாக போலி கையொப்பங்களும் இடப்பட்டதாக கூறப்படுகிறது. மேற்படி தமிழர்கள் தமக்கும் வேட்புமனுவில் தமது பெயர்கள் இடம்பெற்றதற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் தமது சம்மதம் இன்றியே வேட்புமனுவில் தமது பெயர்கள் சேர்க்கப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்தனர். இதனையடுத்து அஷ்ரபின் பொறுப்பில் இருந்த புனர்வாழ்வுபுனரமைப்பு துறைமுகங்கள் அமைச்சின் மேலதிக செயலாளராகஇருந்த ஜெயரத்தினம் எந்தகுற்றமும் சாட்டப்படாத நிலையில் பழிவாங்கும் முகமாக கட்டாய லீவில் அஷ்ரப்பின் அமைச்சினால் அனுப்பப்பட்டார். அதன் பின்னர் அஷ்ரப் ஹெலி விபத்தில் மரணமானதையடுத்து ஜெயரத்தினத்திற்கு வழங்கப்பட்ட கட்டாய லீவு கடிதம் வாபஸ் பெறப்பட்டிருக்கிறது.

கடந்த 50 வருடத்திற்கு இலங்கயின்அரசியல் வரலாற்றில் எந்த ஒரு சிங்கள கட்சியோ அல்லது தமிழ் கட்சியோ இவ்வாறு வேட்பு மனுவில் ஆள்மாறாட்டம் செய்ததில்லை, வேட்பாளராக இருந்தால் அவர் வாக்காளர்களுக்கு தெரிந்தவராக இருப்பார் ஆனால் இம்முறை தேசிய ஐக்கிய முன்னணி என்ற பெயரில் போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் க்ட்சி தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்புமனுக்களில் உள்ள வேட்பாளர்கள் சிலர் இதுவரை யார் என்று தெரியாது.

யாழ் மாவட்ட வேட்பு மனுவில் குறிப்பிடப்பட்டிருக்கும் செல்லையா இராசதுரை யார் என்று வாக்காளர்களுக்கு தெரியாது என தமிழ் கட்சி ஒன்றின் முக்கிஸ்யஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் வாக்குகளை தாம் பெற்று முஸ்லீம பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகவே ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் இத்தகைய வேலைகளை செய்துவருவதாக தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர். இம்மாவட்ட தமிழ் வாக்காளர் தொகையின் படி நான்கு பாராளுமன்ற பிரதிநிதிகளை தமிழர்கள் பெறவேண்டும். கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சிக்கு தமிழ் மக்கள் வாக்குகளை அளித்ததால் தமிழ் பிரதிநிதித்துவம் ஒன்றை இம்மாவட்ட தமிழ் மக்கள் இழந்தார்கள், 3தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் இரு முஸலீம் பாராளுமன்ற உறுப்பினர்களும் தெரிவாகினர்.

**துவாரகன்**

இம்முறை ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் மரச்சின்னத்திற்கும், ஐக்கிய தேசியக்கட்சியின் யானை சின்னத்திற்கும தமிழ் மக்கள் வாக்களித்தால் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் முஸ்லீம் வேட்பாளர்கள் மூவரும் ஐக்கிய தேசியக் கட்சியின்உறுப்பினர் ஒருவரும பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவாகுவார்கள். 75 வீதத்திற்கு அதிகமாக இருக்கும் தமிழ் மக்களுக்கு ஒரு தமிழ் பாராளுமன்ற பிரதிநிதி மட்டுமே தெரிவாக 24வீதத்திற்கு குறைவாக. முஸ்லீம்கள் 4 பாராளுமன்ற பிரதிநிதிகளை பெற இருக்கிறார்கள். இது முஸ்லீம் மகளின் தவறல்ல, அரசியல் வாதிகளின் தந்திரம். தமிழ் மக்கள் தமது இனத்திற்கு ஏற்படப்போகும் அபாயத்தை உணராது தேசிய ஐக்கிய முன்னணி என்ற பெயரில் மரச்சின்னத்தில் போடடியிடும் முஸ்லீம் காங்கிரஸ் கட்சிக்கும் பேரினவாத கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கும் வாக்களிப்பதால் ஏற்படப்போகும் பெரும் ஆபத்தை உணராதவர்களாகவே உள்ளனர்.

இவ்வாறு தமிழ் மக்கள் தங்கள் பிரதிநிதித்துவத்தை பறிகொடுத்தால் 1989ம் ஆண்டுகளுக்குப் பின் அம்பாறை மாவட்டத்திலிருந்து தமிழர் படுகொலல

(4ம் பக்கம் பார்க்க)


அழகுசுப்பிரமணியம் சத்தியநாதன்

ரசியல் விடிவானில் ஓர் இளஞ்சூரியன்



தமிழர் விடுதலைக் கூட்டணி

மட்டக்களப்பு மாவட்டம்






பட்டிருப்பு தொகுதியை புதுப்பொலிவுடன் திகழ்வித்து கொக்கட்டிச்சோலையில் சகல வசதிகள் கொண்ட பாடசாலையை உருவாக்கி கல்வித்துறை வளர்ச்சிக்கு வித்திட

எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் வை ஆதரிப்போம்.

எம். எல். ஏ. எம் ஹிஸ்புல்லாஹ் தேசிய ஐக்கிய முன்னணி

## தோ தோ நாய்க்குட்டி......



தோ தோ
நாய்க்குட்டி
வெள்ளை நிற
நாய்க்குட்டி
வீரமான
நாய்க்குட்டி
❖❖❖❖❖
வாலை வாலை
ஆட்டும்
பாலைப் பாலைக்
குடிக்கும்
நன்றியுள்ள
நாய்க்குட்டி
நான் வளர்க்கும்
நாய்க்குட்டி
❖❖❖❖❖
எலியைப் பிடிக்க
ஓடும்
புலியைப் பிடிக்க
பாயும்
திருடன் வந்தால்
[illegible]க்கும்
லொள்! லொள்!!
லொள்!!!

*பு.துவாரகன்.*
*தரம் - 5*
*மட்/பழுகாமம் விபுலானந்த வித்தியாலயம்.*

## பொது அறிவு

1. சூரிய உதயநாடு - ஜப்பான்
2. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு - நோர்வே.
3. 7075 தீவுகள் கொண்ட கூட்டம் - பிலிப்பைன்ஸ்.
4. சூரிய ஒளி புவியை வந்தடைய எடுக்கும் நேரம் - 8½ நிமிடங்கள்
5. சனிக்கோளின் மிகப் பெரிய துணைக்கோள் - தைற்றன்.
6. ஆசியாவிலுள்ள மிகப் பெரிய ஏரி -பைக்கால்.
7. கிறீஸின் தலைநகரம் - எதன்ஸ்.
8. உலகில் மழை கூடிய பிரதேசம் - சிராபூஞ்சி
9. அவுஸ்திரேலியாவின் தலைநகரம் - கன்வெரா.
10. பூனையின் விஞ்ஞானப் பெயர் - **Felis domestica**

*மு.ஜெயந்தி.*
*மட்/விவேகானந்தா ம.ம.வி.*
*தரம் - 11ᴳ*

## எதிர்ப்பொருட் சொற்கள்

| | |
|---|---|
| பெருக்கம் | சுருக்கம் |
| பேதம் | அபேதம் |
| போலி | அசல் |
| போற்று | தூற்று |
| மங்கலம் | அமங்கலம் |

*ம.மோகனதாஸ்*
*தரம் - 04*
*மட்/தும்பங்கேணி கண்ணகி வித்தியாலயம்.*

**பணத்தை நீ பாதுகாக்க வேண்டும். கல்வி உன்னைப் பாதுகாக்கும்.**





# இளஞ்சிட்டுக்கள்

தயாரிப்பு:
க.கிருபாகரன்
ப.ராதிகா

## அறிஞர் சிந்தனைகள்

1. கடவுள் ஒருவரே என்று நான் நம்புகிறேன்; நம்புகிறவர்களுக்கு கடவுள் இருக்கிறார்.
*மகாத்மா காந்தி.*

2. கல்வி இருளை நீக்கி ஒளியினைக் காட்டும்; இறப்பை நீக்கி அமிர்தத்தை ஊட்டும்.
*தாகூர்.*

## அரிச்சந்திர மகாராஜன்!

-மாஸ்டர் சிவலிங்கம்-

**13**

கல் என்றும பாராது முள் என்றும் பாராது காட்டுப் பாதையிலே ஓடிக் கொண்டிருந்த சந்திரமதி ஆலமரத்தைக் கண்டதும் மகனின் உடலை அங்குமிங்கும் தேடத் தொடங்கினாள். ஓரிடத்தில்...!

நரிகளும் கழுகுகளும் கூட்டமாகக் கூடியிருந்ததைக் கண்டதும், "ஐயோ மகனே!" என்று வாய்விட்டுக் கதறி அழுதாள்.

அவளுடைய குரலைக் கேட்டதும் நரிகளும் கழுகுகளும் சத்தமிட்டபடி அங்கிருந்து ஓடி மறைந்தன. கைகளால் தடவிப் பார்த்து, இலைகுழைகளை நீக்கிவிட்டு தேவதாசனின் உடலை மடிமீது வைத்துக் கதறி அழுதாள்.

எவ்வளவு நேரம் அப்படிக் கதறிக் கொண்டிருந்தாளோ, அது அவளுக்கே தெரியாது. எங்கிருந்தோ ஒரு கோழிச் சேவல் கூவியதைக் கேட்டதுந்தான் சந்திரமதி சுய நினைவடைந்தாள்.

பொழுது விடிவதற்குள் மகனின் உடலை அடக்கம் செய்துவிட்டு வீட்டுக்கு வந்துவிட வேண்டும் என்று தனது எஜமானரான காலகண்டன் கூறியது நினைவுக்கு வந்தது. கண்களைத் துடைத்துவிட்டு மகனின் பிரேதத்தை தூக்கியபடி எழுந்து நின்று அங்குமிங்கும் பார்த்தாள். சற்றுத் தொலைவில் உள்ள சுடலையில் பிரேதமொன்று எரிந்து கொண்டிருந்ததைக் கண்டாள். மகனின் உடலைச் சுமந்தபடி அந்தச் சுடலையை நோக்கி நடந்தாள் சந் திரமதி.

தேவதாசனின் உடலை ஓரிடத்தில் கிடத்தி விட்டு, சுடலையில் அங்குமிங்கும் சிதறிக் கிடந்த விறகுக் கட்டைகளை பொறுக்கி வரிசையாக அடுக்கினாள். அடுக்கப்பட்ட சிதையின் மீது மகனின் உடலை வைத்தாள்.



சற்றுத் தொலைவில் எரிந்து கொண்டிருந்த நெருப்புக் கொள்ளியொன்றை எடுத்து வந்து மகனின் சிதைக்கு தீ மூட்டினாள். அப்போது....!

"ஏய்! யாரடி கள்ளி நீ...? இந்த இரவு வேளையிலே சுடலைக் காவலாளியான எனது அனுமதி இல்லாமல் எப்படி இந்த மயானத்துக்குள் நுழைந்தாய்? இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்.....? என்று ஆத்திரத்துடன் கேட்டான் சுடலைக் காவலாளி.

"ஐயா! நான் ஓர் அநாதை. எனது மகன் பாம்பு கடித்து இறந்துவிட்டான். அவனுடைய உடலைத்தான் எரிக்கிறேன்" என்று கண்ணீர் சிந்தியபடி கூறினாள் சந்திரமதி.

"பெண்ணே! எனது அனுமதியில்லாமல் இந்தச் சுடலையில் யாரும் பிரேதத்தை எரிக்கக்கூடாது. அது மட்டுமல்ல, இங்கு ஒரு பிரேதத்தை எரிக்க வேண்டுமானால், மூன்று முழத் துண்டு,, மூன்றுபடி வாய்க்கரிசி, மூன்று பணம் ஆகியன எனக்குத் தர வேண்டும். அதன் பின்னே பிணத்தை இங்கு எரிக்கலாம்" என்று விளக்கமளித்தான் சுடலைக் காவலாளி.

" ஐயா! நீங்கள் கூறியவற்றைக் கொண்ட வர என்னால் முடியாது. நான் ஓர் ஏழைப் பெண், என்னிடம் ஒன்றுமில்லை" என்று கூறி அழுதாள் சந்திரமதி.

"ஏய் பெண்ணெ! உன்னிடம் ஒன்றுமில்லை என்று ஏன் பொய் சொல்கிறாய்? உன்னுடைய கழுத்திலே தங்கத்தாலி 'தகதக' என்று மின்னும் போது ஏன் பொய் சொல்கிறாய்?" என்று கேட்டான் சுடலைக் காவலாளி. அவன் கூறியதைக் கேட்டதும் அதிர்ச்சி அடைந்த சந்திரமதி. சிறிது நேரம் சிலைபோல அசையாது நின்றாள். பின்பு....!

"ஐயோ ஆண்டவா...! அந்த இந்திரனுக்கும் தெரியாத தாலி, அந்தச் சந்திரனுக்கும் தெரியாத தாலி.... இந்தச் சுடலைக் காவல்காரனின் கண்களுக்குத் தெரிந்துவிட்டதே... இது என்ன சோதனை...?" என்று புலம்பினாள் சந்திரமதி.

அவள் இப்படிப் புலம்பியதும் அதிர்ந்து போய் நின்ற அரிச்சந்திரன், "பெண்ணே! உன்னுடைய பெயர் என்ன?" என்று தட்டுத் தடுமாறியபடி கேட்டான்.

*(தொடரும்)*

## சொல்லாக்கம்

**த** < லை / டி / டை

- தலை
- தடி
- தடை

*அ.கீர்த்தனா,*
*மட்/பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலயம்*

## நவராத்திரி

கல்வி,செல்வம், வீரம் அனைத்தும் தருவது இறைவனே. கருணை வடிவம் கொண்டவளே பெண். எனவே இறைவனை பெண்ணாகக் கொண்டு வழிபட்டு இவ் விழாவை கொண்டாடுகின்றனர்.

வீரத்தைக் தருபவள் துர்க்கை என்றும் செல்வத்தை தருபவள் திருமகள் என்றும் கல்வி தருபவள் சரஸ்வதி என்றும் வணங்குவர். முதல் மூன்று நாட்களும் துர்க்கையையும் அடுத்த மூன்று நாட்களும் திருமகளையும் அடுத்து மூன்று நாட்களும் சரஸ்வதியையும் வழிபடுவர்.

10ம் நாள் விஜயதசமி தினமாகும். அன்றைய தினத்தின் வித்தியாரம்பம் ஏர் பூட்டல் புதுக்கணக்கு ஆரம்பித்தல் ஆகியன இடம் பெறும்.

*செ.குயிலினி,*
*தரம் - 04ᵛ,*
*மட்/பழுகாமம் விபுலானந்த வித்தியாலயம்.*

## குடும்ப அங்கத்தவர்கள்



- அப்பா
- அம்மா
- அண்ணா
- அக்கா
- தம்பி
- தங்கை





*இ.தவமலர்*
*மட்/ஆரையம்பதி மகா வித்தியாலயம்*

## உவமைத் தொடர்கள்

- எடுப்பார் கைப்பிள்ளை போல
- எய்தவன் இருக்க அம்பை நோவது போல
- எலியும் பூனையும் போல
- ஏட்டுச் சுரக்காய் போல
- ஒளியைக் கண்ட இருளைப் போல

*செ.குயிலினி,*
*தரம் - 04.*
*மட்/திருப்பழுகாமம் விபுலானந்த வித்தியாலயம்*

## நானும் என் கல்வியும்

உலகமே போற்றிடும் கல்வி
நம் வாழ்வை உயர்த்திடும் கல்வி
பல நூல் பயின்றிட வளரும் கல்வி
நம்மைப் பாரினில் உயர்த்திடச் செய்யும் கல்வி
கல்வி என்னும் பயிருக்கு
கண்ணீர் என்னும் மழை தேவை.

கல்வியீன் வேர் கசக்கும்
ஆனால் அதன் கனி இனிக்கும்.

கல்வி என்னும் கடலை வீட்டு வீடாதே

*R.நுஸ்ரி*
*தரம் - 6*
*மூதூர்*

## விடுகதைகளும் விடைகளும்

1. 'பச்சை சட்டிக்குள் பாயாசம்' அது என்ன?
2. 'நூறு பாசை பேசும் வாயில்லா ஊமை; மணியடித்து காட்டும்' கையில்லா ஆமை' அது என்ன?
3. 'வெள்ளைக் காரனுக்கு மஞ்சள் சட்டை' அது என்ன?


**இளநிர், தொலைபேசி, வாழைப்பழம்.**

*இ.பிரஜன்னியா– கல்லடி, விபுலானந்தா வித்தியாலயம்.*

## இளஞ்சிட்டுக்களே........

நிறந்தீட்டி உங்கள் கைவண்ணத்தை காட்டுங்கள். இப் படத்திற்கு சிறந்த முறையில் நிறந்தீட்டி அனுப்பும் மூன்று சிறார்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் பெயர் விபரங்கள் அடுத்த இளஞ்சிட்டுக்களில் பிரசுரமாகும்.

அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 14.10.2000



'இளஞ்சிட்டுக்கள்',
தினக்கதிர்,
த.பெ.எண்:-06,
எல்லை வீதி,
மட்டக்களப்பு.

# விளையாட்டுச் செய்திகள்



அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரியில் அண்மையில் இடம் பெற்ற பென்தாதலன் சாம்பியன் போட்டியில் வெற்றியீட்டிய வீரர்களுடன் உடற்கல்வி விரிவுரையாளர் எம்.ஐ.எம்.முஸ்தபாவுடன் எடுத்துக்கொள்ளப்பட்ட படம்

## சுசந்திக்காவின் வெற்றி

### ஏனைய வீரர்களை உசார்படுத்தியுள்ளது.

(சிட்னி)

சுசந்திக்காவின் பதக்க வெற்றியால் இலங்கையின் ஏனைய ஒலிம்பிக் வீரர்களும் உற்சாக மடைந்து புது நம்பிக்கை பெற்றுள்ளனர். அவர்களும் பதக்கம் பெறுவார் களா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.



அட்டாளைச்சேனை தேசியக் கல்விக்கல்லூரியில் இடம் பெற்ற பென்தாதலன் போட்டியில் கூடுதலான புள்ளிகளைப் பெற்று சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட சி.எம்.அஸ்கரை படத்தில் காணலாம்.

உடற்கல்வி நெறியில் பயிற்சிபெறும்இவர் மருதமுனையைச் சேர்ந்தவர்.

(படம் - முபா)

## எதிர்பார்த்த நாடுகள் மண் கௌவின

### ஆண்களுக்கான கால்பந்தாட்டம்

(நிருபர் பிரகாஸ்)

சிட்னி ஒலிம்பிக்கில் நடைபெறும் போட்டிகளில் அநேகமான ரசிகர்கள் உள்ளத்தை கவர்ந்த விளையாட்டாக கால்பந்து திகழ்கிறது. நைஜீரியா, பிறேசில், இத்தாலி ஆகிய நாடுகளிடையே வெல்லும் என்ற நிலை இருந்தது. இவ்வாறான நிலையில் இம்மூன்று நாடுகளும் கோட்டை விட்டன. தற்போது கமரோன், சிலிஸ்பெயின் ஆகிய நாடுகளே கால்பந்தாட்டத்தில் ஆதிக்கம் செலுத்தின.

அமெரிக்காவை பெரிய அளவில் எதிர்பார்த்தாலும் கால்பந்தாட்டத்தில்கோட்டை விட்டுள்ளது. 23ம் திகதி மெல்போன் கிரிக்கட் அரங்கில் 64338 என்ற எண்ணிக்கையில் ரசிகர்கள் கூடியிருக்க சமரோன் அணியும் சிசிலியா அணியும் மோதிக்கொண்டன. இப்போட்டியில் சமரோன் 2க்கு 1என்ற நிலையில் சிலியை தோற்கடித்தது. முக்கிய விடயம் என்னவென்றால் கிரிக்கட் ஆட்டத்திற்கே இவ்வாறான மக்கள் தொகை இவ்வரங்கில் இடம்பெற்றதில்லை என்பது முக்கிய விடயமாகும். இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ள கமரோன் அணிபதக்கத்தை வெல்வோம் என நம்பிக்கை தெரிவித்துள்ளது.

1996இல் நைஜீரியா அட்லாந்திக்கில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பதக்கத்தை சுவீகரித்துகொண்டோம். இம்முறை இறுதிப்போட்டிக்கு தெரிவாகியிருக்கும் நமக்கு இதுவே சுபகாலம் என அணித்தலைவர் கூறியுள்ளார்..

# வாசகர் நெஞ்சம்

## உடைந்த சீற்றை மாற்ற ஒருத்தருமே இல்லையா?

மட்/ மட்டிக்களியில் செழியன் சிறுவர் பூங்காவுக்கு எதிர்பக்கமாக சமுர்த்தியினால் அமைக்கப்பட்ட குடிசைக் கைத்தொழில் நிலையமொன்று உள்ளது.

அண்மையில் வீசிய பலமான கச்சான் காற்றினால் இந்தக் கட்டிடத்தின் கூரைச்சீற் உடைந்து பறந்து விழுந்துள்ளது.

ஆனால் பல மாதங்களாகியும் ஓட்டையாகக் காட்சி தரும் இந்தக் கூரையை புதிய சீற்போட்டு அடைக்காமல் அப்படியே இருப்பதனால் இதற்குள் போயிருந்து வேலை செய்வோர் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மழைகாலம் வரும்போது மிகவும் மோசமாக இந்தக் கட்டிடம் பாதிப்புள்ளாக நேரிடும். ஆகவே இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடைந்த சீற்றை மாற்றி புதிய சீற்போட நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன்.

*எம்.மாணிக்கம்*
*மட்டிக்களி*

## சாள்ஸ் வேலுப்பிள்ளை வீதியின் அவலநிலை

கல்லடியிலுள்ள சாள்ஸ் வேலுப்பிள்ளை வீதியின் அவலநிலையை எத்தனையோமுறை மாநகர சபைக்கு எடுத்துச் சொல்லியும் இன்னும் தான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவ்வீதியில் வாகனங்கள் போகமுடியாமல் ஆங்காங்கே மேடும் பள்ளமுமாக உள்ளது. அத்தோடு அவ்வீதியில் துண்டுக்கற்கள் போடப்பட்டும் இருக்கிறது. மாரிகாலம் வந்தால் முழங்காலளவு தண்ணீர் ஓடும். மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாமல் பெரிதும் கஷ்டப்படுகின்றார்கள்.மீனவர்கள் இவ்வீதியால் தான் தங்கள் தொழிலுக்காகப் போய்வருகிறார்கள். அவர்களும் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே போய்வருகிறார்கள்.

எனவே இவ்வீதியைச் செப்பனிட்டுத் தருமாறு மாநகர சபையாரிடம் வேண்டிநிற்கிறேன்.

*து.தியாகராஜா*
*கல்லடி*

# எதிர்பாராத சம்பியன்கள்

ஒலிம்பிக்போட்டிகளில் ஆடவருக்கான 200மீற்றர் ஓட்டப் போட்டியில் கிரேக்கவீரர் கொன்ஸ்டான்டினோஸ் கென்டேரிஸ் அனைவரையும் பிரமிப்பில் ஆழ்த்தி தங்கப்பதக்கம் வென்றிருந்தமை ஏற்கனவே தெரிந்தவிடயம் தான்.

ஒலிம்பிக் வரலாற் றிலேயே இறுதி முடிவை அனுமானிக்க முடியாதிருந்த 200மீற்றர் ஓட்டப்போட்டியாகவும் சிட்னி போட்டி அமைந்துவிட்டது.


ஆடவருக்கான 100மீற்றர் ஓட்டத்தில் வெள்ளிப்பதக்கம் வென்ற ட்ரினிடாட் அன்டுபாகோ நாட்டைச்சேர்ந்தஅடோ போல்டனே வெற்றிபெறுவார் என அனைவரும் எதிர்பார்த்திருக்கையில் 27வயதுடைய கிரேக்க வீரரோ மேற்படி 200 மீற்றர் தூரத்தை 20-09செக்கனில் ஓடி முதலிடம் பெற்றார். மேற்படி தூரத்தை 20.20 செக்கனில் ஓடிய அடோபோல்டன் வெண்கலப் பதக்கத்தையே வெற்றிபெற முடிந்தது.

இதேபோன்ற ஆடவருக்கான 110மீற்றர் தடைதாண்டல் ஓட்டப்போட்டியிலும் முன்னனி வீரர்களைத் தோற்கடித்து கியூபா வீரர் அணிபர் காஸியா வெற்றி பெற்றார்.

தடைதாண்டல் ஓட்ட உலக சாதனையாளரான பிரித்தானிய வீரர் கொலின் ஜெக்ஸன் அட்லாண்டா ஒலிம்பிக் சாம்பியன் அலன் ஜொன்ஸன் ஆகிய இருவரில் ஒருவர் தங்கம் வெல்லக்கூடும்என எதிர்பார்த்திருக்கையில் கியூபாவைச் சேர்ந்த 24வயதுடைய வீரர் 13 செக்கனில் ஓடித்தங்கம்வென்று அனைவரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியிருந்தார்.



அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலை இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் கலாசாலை மைதானத்தில் இடம் பெற்ற போது இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அட்டாளைச்சேனை தேசியக் கல்விக்கல்லூரி பீடாதிபதி கே.முகம்மத்தம்பி உரையாற்றுவதை படத்தில் காணலாம்.



**அமெரிக்காவுக்கு எதிரான கைப்பந்து போட்டியில் வெற்றி பெற்று வெண்கலப் பதக்கம் கைப்பற்றிய மகிழ்ச்சியில் வீராங்கனைகள் உற்சாகத்துடன் இருப்பதை படத்தில் காணலாம்**

# ஆன்மீகம் அறிவோம்



ஆன்மீக வாழ்க்கையில் மிக முக்கியமானது ஜெபம் என்னும் சாதனமாகும்.இதுஅகத் தூய்மைக்கு முக்கியமானது. நமது எண்ணம், சொல், செயல் மூன்றையும் தூய்மைப்படுத்த வேண்டும். மனத்தூய்மை பெற வேண்டுமானால், அதிகளவு ஜெபம் அனுசரிக்கவேண்டும். இறைவனுடைய புனித நாமத்தை மீண்டும் மீண்டும் உச்சரிப்பது சாதனமாகும். இயந்திர கதியில் ஜெபம் சொல்லப்போனால், பலன் குறைவாகவே உண்டாகும். "ஒருவர்ஜெபசாதனம் கைக்கொள்ளாதவரையில்,பூரண மனத்தூய்மையை அடையமுடியாது" என்று சுவாமி பிரம்மானந்தாஜி கூறினார்.

ஆகவேநமது வாழ்க்கையிலேஜெபத்திற்கு முக்கியமும் முதலுமான இடம் கொடுத்து, அகத்தூய்மை, மனத்தூய்மையுடன் வாழ்ந்து, இறைவனின் உறவிலே அக்களித்து ஜெபமனிதர்களாக மாறி,பூரண மனத்தூய்மையைப் பெற்று சச்சிதானந்த உறவில் இணைந்திடுவோம்.

அருட்சகோ.ஞா.மரியநாதன்




தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) மட்டக்களப்பு மாவட்டம்

* வடக்கு கிழக்கு இணைந்த தாயகத்தை வலியுறுத்த * அவசரகால சட்ட நீடிப்புக்கு எதிராக வாக்களிக்க
* "புலி" களுடன் பேசி பொது இணக்கத்துக்கு வருமாறு அரசை வலியுறுத்த

வெளிச்சவீட்டு சின்னத்திற்கு வாக்களியுங்கள் !

பிரசன்னா - 4



சாந்தன் - 5

# கிரான்குளத்தில் இரு தமிழ் கட்சிகளுக்கிடையே கைகலப்பு !

(நமது நிருபர்)

**கிரான்குளத்தில் மட்டக்களப்பு தமிழர் விடுதலை வேட்பாளர் ஆதரவாளர்களுக்கும் தமிழ் காங்கிரஸ் அணியினருக்கும் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:**

நேற்று கிரான்குளத்தில் தமிழர் விடுத்தலைக்கூட்டணியினரின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் ஆதரவாளர்களும் ஒரு தேர்தல் பிரசாரக் கருத்தரங்கு ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். அதன் பிரகாரம் ஊர்வலம் இடம் பெற்றது. பிரதான வீதியூடக ஆரம்பித்து ஊர்வீதியில் ஊர்வலம் வரும் போது தேர்தல் பிரசாரம் செய்து வந்து கொண்டிருந்த மற்றுமொரு தமிழ் காங்கிரஸ் அணியினருக்கும் இடையில் வழி விடுவது யார் என்ற நிலையில் ஏற்பட்ட தர்க்கம் இறுதியில் கைகலப்பு வரை சென்றுள்ளது. பின்னர் நிலைமை மோசமடைந்து செல்ல மேற்படி தமிழர் விடுதலை கூட்டணியின் வேட்பாளரின் மெய்ப்பாது காவலர்கள் ஆகாயத்தைநோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்து கூட்டத்தினரை கலைத்தனர்.

## இப்படியும் ஒரு தேர்தல் களம்

(யாழ் நிருபர்)

யாழ் மாவட்டத்தில் தேர்தல் களத்தில் சுயேச்சைக்குழு மூன்று சார்பாக போட்டியிடும் வேட்பாளர்கள் ஜனாதிபதியின் "கட்டவுட்களையும்" வைத்துள்ளனர்.

"நம்மினத்தின் நம்பிக் கையின் சின்னம்" என வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ் மாவட்டத்தில் போட்டியிடும் சீங்கள உறுமய"தேர்தல் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் தமிழ் படுகொலைகள் கண்டிக் கப்பட்டுள்ளது.

## யாழ் மாவட்டத்தில் பாண் விலை அதிகரிப்பு

(யாழ் நிருபர்)

யாழ் மாவட்டத்தில் 7.50 சதத்திற்கு விற்பனை செய்யப்பட்ட 350 கிராம் நிறையுடைய பாண் 4.50 கிராம் எடையுடன் 10. 50 சதத்திற்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் விற்பனை செய்யப்பட்ட 3.50 கிராம் நிறையுடைய பாண் நிறை குறைவாக விற்பனை செய்யப் பட்டதாக பொதுமக்கள் தெரிவித்த புகாரைத் தொடர்ந்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பயண அனுமதியில் வயோதிபர்களுக்கு சலுகை

(யாழ் நிருபர்)

கர்ப்பிணிகள், 65 வயதுக்கு மேற்பட்டோர்கள் ஊனமுற்றோர்கள் பயண அனுமதி பெறுவதற்காக யாழ் சிவில் அலுவலகத்திற்கு செல்லத் தேவையில்லை என யாழ் சிவில் நிர்வாக அதிகாரி அறிவித்துள்ளர்.

தேசிய அடையாள அட்டை பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் போன்றவற்றை உறவினர்கள் சமர்ப்பித்து பயண அனுமதியைப் பெற முடியும் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

புதிய நடைமுறைப்படி பாதுகாப்பு அனுமதி பதிவு... ள மேற்கொள்... வற்றுக்காக தினமும் 12.50 மணிக்கு பின்பு யாழ் சிவில் நிர்வாக அலுவலகத்திற்கு செல்ல அனுமதி வழங்கப்படுகின்றது.

உள்ளே செல்பவர்களுக்கு வாசலில் வைத்து வழங்கப்படும் இலக்கத்தில் தரத்திற்கு ஏற்ப பயண கருமங்களை ஆற்ற முடியும்.

## பட்டதாரி ஆசிரியர் மின்னல் தாக்கி மரணம்

(நமது நிருபர்)

அக்கரைப்பற்றில் நேற்று மாலை மின்னல் தாக்கி பட்டதாரி ஆசிரியர் ஒருவர் பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளார். மற்றும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

உமறு லெப்பை அன்ஸார் என அழைக்கப்படும் பட்டதாரி ஆசிரியரே உயிரிழந்தவராவர்.

அக்கரைப்பற்று இலுக்குச் சேனை வயல் பகுதியில் வைத்து நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் மேற்படி சம்பவம் இடம் பெற்றுள்ளது


### உடன் தேவை

Adobe PageMark 6.5 மிக வேக... தமிழ்டைப்செட்டிங். மற்றும் வடிவமைப்பு செய்யக் கூடியவர்கள் உடன் தேவை 4.10.2000 புதன் 10மணிக்கு தினக்கதிர் காரியாலயத்திற்கு வரவும் நிர்வாகி.தினக்கதிர்





## தேர்தல் வன்முறை அதிகரிப்பு

(நமது நிருபர்)

வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்ட தினத்தில் இருந்து நேற்று காலைவரை 829 தேர்தல் வன்முறைகள் பதிவாகி உள்ளதாக பொலிஸ் தேர்தல் அலுவலகம் அறிவித்துள்ளது.

பொது ஜன ஐக்கிய முன்னணி 289 முறையீடுகளையும் ஐக்கி தேசியக் கட்சி 384 முறையீடுகளையும், மக்கள் விடுதலை முன்னணி 93 முறையீடுகளையும் செய்துள்ளன.

பதுளை மாவட்டத்தில் 82 சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

## வவுணதீவில்...................

எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டது. படையினரின் எறிகணை கன்னன்குடா, குறிஞ்சா முனை ஆகிய இடங்களில் விழுந்து வெடித்ததாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் ஒரு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இரு பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

இம்மோதல்களால் மட்டக்களப்பு நகருக்கு மேற்கே இருக்கும் படுவான்கரை கிராமங்களிலிருந்து மக்கள் எவரும் மட்டக்களப்பு நகருக்கு வரவில்லை. பொதுமக்கள் இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு வரும் பாதையிலேயே இந்த மோதல்கள் நடைபெற்றன.

**நகரில் பாதுகப்பு தீவிரம்**

மட்டுநகரின் தாண்டவன் வெளிப்பிரதேசத்தில் நேற்றுக்காலை படையினர் தேடுதல் நடவடிக்ககைகளை மேற்க்கொண்னடனர்.



## கருத்து கணிப்பீட்டில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி முன்னணியில்

(நமது நிருபர்)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியை விட ஐக்கிய தேசியக் கட்சி 0.2 சதவீதத்தால் வெற்றி பெறும் என ஆய்வுகள் தெரிவிக் கின்றன.

"றிசேட் இன்ரநெஷனல் பிரைவேற் லிமிட்டட்" ஆய்வு செய்துள்ள கருத்துக் கணிப்பீடுகளின்படி 38.1 சதவீதமானோர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக் கவுள்ளனர். 37.9 சதவீமானவர் பொ.ஐ.மு வாக்களிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 47.3 சதவீதமானோர் மீண்டும் பொ.ஐ.மு அரசே ஆட்சிக்கு வரவேண்டும் என்றும் 42.4சத வீதமானோர் அரசாங்கம் மாற வேண்டும் என விரும்புகின்றனர்.

இதேவேளை ஐலண்ட், சண்டேரைம்ஸ் ஆகிய ஆங்கிலப் பத்திரிகைகளும் ஆய்வு செய்துள்ளன. பொ.ஐ.மு, ஐ.தே.க விட 5.6சத வீதத்தால் முன்னணி வகிப்பதாக கணித்துள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி

மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரண அபிவிருத்திக்கு
பொதுஜன ஐக்கிய முன்னணியின்
முதன்மை வேட்பாளர்
கே. எஸ் கணேசமூர்த்தி அவர்களுக்கு
வாக்களிப்போம் !





வீணை



ஈ.பி.டி.பி

சோரம் போகாமல்
பேரம் பேசும் ஆற்றல் !
வீரம் மட்டுமின்றி விவேகம்
வெளிப்படுத்தும் திறமை

வீணைக்கே வாக்களிப்போம்!


இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிக்கேஷன் நிறுவனத்தினரால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.